# ஆலமரத்து ஆவி



திருகோணமலை பிரெட்ரிக் கோட்டையை (Fort Fredrick) இலங்கையில் அறியாதவர்கள் இல்லை. இதைப்பற்றிய பல கதைகளுண்டு. தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகவும் செல்வம் படைத்த கோயிலாக அக்கோட்டையின் உச்சியில் இருக்கும் திருக்கோணேஸ்வரம், ஓர் காலத்தில் திகழ்ந்தது. இலங்கையில் உள்ள ஐந்து ஈஸ்வரங்களில் அதுவும் ஒன்று. கி.பி 1505ம் ஆண்டில் போர்த்துக்கேயர் இலங்கையை ஆட்சி செய்தபோது தமது கத்தோலிக்க மதத்தைப் பரப்ப, இந்து, பௌத்த கோயில்களை நிர்மூலமாக்;கினர். 1624ம் ஆண்டு சித்திரை 14ம் திகதி வெள்ளிக்கிழமை புதுவருடப்பிறப்பு. கோணேஸ்வரக் கோயிலில் பூசை நடந்து கொண்டிருந்தது. போர்த்துக்கேய வீரர்கள் கோயில் குருமார்கள் போல் வேடம் தரித்து மக்களோடு மக்களாகக் கோயிலுக்குள் சென்றனர். கோயிலில் பூஜை முடிந்து மக்கள் வெளியேறியபின், கொன்ஸ்டன்டைன் டீ சா (ஊழளெவயவெயin னுந ளுய) என்ற வெறிபிடித்த போர்த்துக்கேய தளபதி, தன் வீரர்களின் உதவியுடன் கோயிலைப் பீரங்கியால் தாக்கினான். கோயிலுக்குள் இருந்த குருமாரும் சில பொதுமக்களும் தாக்குதலின் போது பலியானார்கள். பொக்கிஷங்களை கொள்ளையடித்துவிட்டு. விக்கிரகங்களைக் கடலுக்குள் எறிந்தனர்.

ஆங்கிலேயர் ஆட்சியின் போது, அக்கோட்டை அவர்கள் வசமாயிற்று. ஆங்கிலேயரின் சம்மதத்துடன் மக்கள் குறைந்தளவில் கோயிலுக்குச் சென்று வழிபட்டனர். மூன்றாம் ஜோர்ஜ் மன்னரின் மகனான பிரெடிரிக் (குசநனசiஉம) அந்தக் கோட்டைக்கு தளபதியாக இருந்தபோது கோட்டைக்கு குழசவ குசநனசiஉம எனப்பெயரிட்டனர். இன்றும் அதே பெயர் நிலைத்து நிற்கிறது.

இப்படியான பல சுவர்ஸ்யமான கதைகளை உள்ளடக்கிய கோட்டைக்குள் வயதில் பல முதிர்ந்த, விழுதுகளை நிலத்தில் ஊன்றிய பாரிய ஒரு ஆலமரம். அதைச் சுற்றி வளர்ந்த் செடிகள். அங்கு சுதந்திரமாக உலாவித் திரியும் மான்களும, முயல்களும்.; ஆல மரத்திற்கு மாத்திரம் பேசமுடியுமானால் வாழ்க்கையில் விரக்தியடைந்து தன் மரக்கிளையில் தூக்குப்போட்டுத் துடிதுடித்து தம் உயிரை அழித்துக்கொண்டவர்களின் கதைகள் அனேகம் சொல்லியிருக்கும். பாவி மனிதர்கள் சாகும் போது நல்லதை செய்து விட்டு போகாமல் எனக்கு “ஆள் தின்னி ஆலமரம்” என்ற அவமானப் பெயரையும் தந்துவிட்டுப் போய்விட்டார்கள் என்று மரம் தனக்குள் குறைபட்டுக் கொண்டதை யார் அறிவர்.
சில வருடங்களுக்கு முன் தான் காதலித்த பெண்ணை திருமணம் செய்ய பெற்றோர்கள் சம்மதிக்காததால் கோட்டையின்; உள்ள கோயிலுக்கு அருகேயுள்ள “லவ்வர்ஸ் லீப்” என்ற குன்றின் உச்சியிலிருந்து கடலுக்குள் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டான் ஒரு இளைஞன். அதை தொடர்ந்து காதலனின் பிரிவு தாங்காது ஆலமரத்தில் தூக்கு போட்டுத் தற்கொலை செய்துகொண்டாள் அவனுடைய காதலி. அதன் பிறகு சில மாதங்களில் அந்த மரத்தில் இன்னொரு தற்கொலை. சிங்கள போலீஸ்காரன் ஒருவனால். திருமணமாகவிருந்த மெனிக்கே என்ற பெண்ணொருத்தி கற்பழிக்கப்பட்ட காரணத்தால் அந்த ஆலமரத்தில் அவள் தூக்குப் போட்டுக் கொண்டு தற்கொலை புரிந்ததாகக்

கதையுண்டு. ஆலமரத்தில் அந்தப் பெண்ணின் ஆவி, தான் சாவதுக்கு காரணமாயிருந்தவனை பல தீர்க்க காத்திருப்பதாக பலர் பயந்து இரவு நேரங்களில் ஆலமரத்தடிப்பக்கமே போவது கிடையாது. ஆனால் அந்தப் பெண்ணின் ஆவியை ஒருத்தரும் நேரடியாகக் கண்டதில்லை. அந்த தற்கொலை ஆலமரத்தைப்; பற்றிய ஒரு பழம் கதையும் வேறுண்டு. போர்த்துகேய தளபதி கொன்ஸ்டன்டைன் டீ சா கோயிலை சூறையாடிய போது குருக்களின் அழகிய இளம் மனைவியை தூக்கிச் சென்று கற்பழித்ததாகவும் , அப்பிராமணப் பெண் அவமானம் தாங்காமல் ஆலமரத்தில் தூக்குப் போட்டு இறந்ததாகவும் ஊர்க்கதையுண்டு.

கதைகள் எவ்வாறு இருப்பினும் நாம் எமது கதைக்கு வருவோம். நம் கதையின் கதா நாயகன் திருகோணமலை பொலிஸில் வேலை செய்யும் பொலீஸ்காரன் பொடிஅப்புகாமி. திருகோணமலைக்கு அருகாமையில் உள்ள கிண்ணியா கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவன். அரும்பு மீசைக்காரன். வசீகரமான தோற்றமுள்ள அவன், உயரம் குறைந்தவனாகையால் “பொடியா” என்று அழைக்கப்பட்டான். போடியா என்றால் சிங்களத்தில் குள்ளன் என்பது அர்த்தம். திருகோணமலையில் பொடியாவைத் தெரியாத பெண்கள் இல்லை. “கடுகு சிறிதானாலும் காரம் பெரிது” என்பது போல் ஆள் உருவத்தில் கட்டையன், ஆனாலும் மன்மத லீலைகளுக்குப் பெயர் பெற்றவன். நண்பர்களிடையே “பொடி ரோமியோ” என்ற பட்டப்பெயர் வேறு அவனுக்கு. வேலை செய்த இடங்களில் எல்லாம் பல பெண்களில் தன் முத்திரையைப் பதித்து வந்தவன். சொந்த ஊர் கின்னியா என்ற காரணத்தால் அரசியல்வாதிகளின் உதவியுடன் பல காலம் திருகோணமலைப் போலீசில் வேலைபார்த்து வந்தான். குடியும் கூத்தியும் அவன் பொழுது போக்கு. மெனிக்கா என்ற இளம் பெண் ஆல மரத்தில் தூக்குப் போட்டு; இறந்ததிற்கு அவன் தான் காரணம் என்று அவன் நண்பர்கள் பலருக்குத் தெரியும்.

ஆனால் ஆதாரமும் சாட்சிகளும் கிடையாது. முப்பது வயதைத் தாண்டியும் பொடியா திருமணமாகாதவன். அதில் நம்பிக்கை இல்லாதவன். சுறுசுறுப்பானவன். முகத்தில் பெண்களைக் கவரும் ஒரு கவர்ச்சி அவனுக்கு இருந்தது. தமிழும், சிங்களமும் சரளமாகப் பேசுவான். இனிமையாகக் கதைத்து பெண்களை மயக்கக் கூடிய வல்லமை படைத்தவன். தான் கண் வைத்தப் பெண்ணுடன் உடலுறவு கொள்ளாமல் விடமாட்டான். கொலை செய்யவும் அஞ்சாதவன்.

அன்று அமாவாசையிரவு. பகலில் தொடங்கிய காற்றும் மழையும் விட்டபாடில்லை. “வங்காள விரிகுடாவில் மையங்கொண்ட புயல் இலங்கையின் கிழக்குப் பகுதியைத் தாக்கலாமென நம்மபப்படுகிறது அதனால் மீனவர்கள் கடலுக்குப் போக வேண்டாமென” வானொலியில் அடிக்கடி அபாய அறிவிப்பு அறிவிக்கப்பட்டது. பொடியா, மீனவர் வாழும் பகுதிகளுக்கு ஜீப்பில் சென்று அறிவித்தலைச் செய்துவிட்டு டியூட்டி முடிந்து பொலீஸ் மெஸ்சுக்கு திரும்பும் போது இரவு ஏழுமணியாகிவிட்டது. மெஸ்சில் தனது பழைய நண்பன்; பண்டாவை, சார்ஜன் மஹிந்தவுடன் கண்டது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது,
“என்ன பண்டா பல மாதங்களுக்குப் பிறகு இந்தப் பக்கம்” என்றான் பொடியா.
“நான் இந்த மாதம் தொடக்கம் அனுராதபுரத்திலிருந்து திருகோணமலைக்கு டிரான்ஸ்பர். நீ இன்னும் இங்கேயா வேலை செய்கிறாய் பொடியா?
“ஓம் மச்சான். நம்ம சொந்த ஊர் பக்கத்திலை இருக்கிற கிண்ணியா. ஏன் உனக்கு தெரியும் தானே?”
“தெரியும். உன் அப்பாவும் அம்மாவும் எப்படி”?.
“அவர்கள் இறந்து மூன்று வருடங்களாயிற்று. அந்த வீடடில் என் அக்கா குடும்பம் இருக்கிறது”
“நீ இன்னும் கலியாணம் முடிக்கயில்¡யா?”

“என்னத்துக்கு எனக்கு கலியாணம் மச்சான். மனுசியிருந்தால் வாழ்க்கையை என் விருப்பப்;படி அனுபவிக்க முடியாது” என்று இடுப்பில் கட்டியிருந்த தன் பட்டியையும், தொப்பியையும் களட்டி மேசையில் வைத்துவிட்டு பண்டாவுக்கருகே போய் அமர்ந்தான்.

“பொடியா டியூட்டியாலை களைச்சுப் போய் வந்திருக்கிறாய் ஒரு கிளாஸ் விஸ்கி அடியன் என்று பிளக் லேபல் ஜொனி வோக்கர் விஸ்கி போத்தலையும் கிளாசையும் பொடியாவிடம் மஹிந்தா கொடுத்தான்.

“எங்காலை மஹிந்தா உனக்கு வெளிநாட்டு விஸ்கி. வழக்கத்திலை உள்நாட்டு கல்ஓயா தானே அடிக்கிறனி?” என்றான் பொடியா.

“ இன்றைக்கு டிரான்ஸ்போர்ட் கொம்பெனி முதலாளியின்டை லொரிக்கு ஒரு பெரிய அக்சிடென்ட். அந்தக் கேசை அவருக்கு சாதகமாக செய்து கொடுத்ததிற்கு அவர் தந்த விஸ்கி இது” என்றான் சார்ஜன் மகிந்தா.

போத்தலில் இருந்த விஸ்கியின் மட்டம் குறையக் குறைய நண்பர்கள் மூவரினதும் பேச்சு, பொலீஸ் சேவை, புரொமோஷன், குடும்பம், சினிமா ஆகிய விஷயங்களிலிருந்து கோட்டையினுள் உள்ள ஆலமரத்து ஆவிக்குத் தாவியது.

“என்ன பொடியா நீ தான் சினிமா பைத்தியமாச்சே எக்சோசிஷ்ட் (Excorsist) என்ற ஆவிபற்றிய ஆங்கிலப்படம் பார்த்தியா?” மஹிந்தா கேட்டான்.

“இல்லை. எனக்கு ஆவிகளைப் பற்றி நம்பிக்கையில்லை”

“எங்கடை போர்ட் பிரெட்ரிக் ஆலமரத்து ஆவியைப் பற்றிய ஊர் கதைகளைக் கூட நீ நம்பவில்லையா”? மஹிந்தா கேட்டான்.

“ நீ எதை மஹிந்தா சொல்லுறாய்”?

“நான் சொல்லுறது கோட்டை உச்சியிலை உள்ள காட்டுபக்கத்தில் இருக்கிற ஆலமரத்து மோகினி பிசாசைப் பற்றித்தான”.

“ஓ அதுவா? அது சனங்கள் கட்டிவிட்ட கட்டுக்கதை. யாரோ ஒருத்தி காதலிலை தோல்வியடைந்ததால் தூக்குப்போட்டு சில மாதங்களுக்கு முன் செத்ததை

வைத்து கதை வி;ட்டிருக்கினம்.” கிளாசில் விஸ்கியை ஊற்றியபடி சிரித்துக்கொண்டே சொன்னான் பொடியா.

“ மச்சான் உன்னையும் அந்த தற்கொலை செய்த பெண்ணையும் தொடர்பு படுத்தி சனங்கள் பல விதமாக பேசுதுகள் அது உண்மையா”? பண்டா கேட்டான்.

“மஹிந்தா. எனக்கு அந்த ஆலமரத்திலை தூக்குப்போட்டுச் செத்த மெனிக்காவின் வின்றை குடும்பத்தைத் தெரியும் என்பது உண்மை. மேனிக்காவின் அண்ணன் சிரிபால என்டை கூட்டாளி. அவனும் என்னைப் போல சினிமாப் பைத்தியம். அதனாலை அடிக்கடி அவன் வீட்டை போய் வந்தனான். அதுவும் உண்மை. அதுக்காக நான் மெனிக்காவை கெடுத்து அவள் சாவுக்கு நான் தான் காரணம் எண்டு ஊர் கட்டிய கதை முழுப்பொய்.” மேசையிலிருந்த கஜ_வை வாயில் போட்டு மெண்றபடி அவர்கள் இருவரையும் நேரடியாகப் பார்க்காமல் பதில் சொன்னான் பொடியா.

“ அந்த மெனிக்காவுக்கும் அவள் காதலித்த ஒருவனுக்கும் கலியாணம் நிட்சயமாகி விருந்ததாம். அது உனக்குத் தெரியுமா பொடியா?” பண்டா கேட்டான்.

“அது உனக்கு எப்படித் தெரியும் பண்டா “ ?

“உனக்குத்தான் தெரியுமே போலீசிலை வதந்தி எப்படி பரவும் எண்டு. போர்ஸ்மோட்டத்திலை அவள் முன்று மாத கர்ப்பினி என்று கண்டு பிடிக்கப்பட்டது உனக்குத் தெரியும் தானே பொடியா”? என்று மேலும் பொடியாவின் வாயைக் கிண்டினான் மஹிந்தா.

“அது தான் தன்னைக் கெடுத்தவனைப் பழிவாங்க மெனிக்காவின் ஆவி அலையுதாக்கும்.” சாராயத்தை சுவைத்தபடி சொன்னான் பண்டா.

“நான் தான் அப்பவே சொன்னனே எனக்கும் மெனிக்காவுக்கும் எந்த வித தொடர்பும் இருந்ததில்லை என்று. இந்த ஆவிகள் பற்றியக் கட்டுக்கதைகளில் எனக்கு நம்பிக்கை இல்லை. திரும்பத் திரும்ப அதைப்பற்றி ஏன் கதைக்கிறியள்?” சற்று கோபமாகச் சொன்னான் பொடியா.

”உனக்கு ஆவிகளிலை நம்பிக்கை இல்லை என்றால் நாங்கள் விடுகிற சவாலை ஏற்றுக் கொள்கிறாயா?” மஹிந்தா கேட்டான். சவால் என்றதும் பொடியா உசாரானான். அவனுக்கு யாரும் சவால் விட்டாலும் அதை எதிர்த்து நிற்பதில் ஒரு மனத் திருப்தி.

“ என்ன சவால் சொல்லு?”

“இண்டைக்கு இரவு பண்ணிரண்டு மணிக்கு சைக்கிலிலை நீ தனியாய் அந்த ஆலமரத்தடிக்குப் போய் ஒரு ஆலம் விழுதைக் எடுத்துக் கொண்டு வர உன்னாலை முடியுமா?” சாவால் விட்டான் மஹிந்தா.

“என்ன மஹிந்தா, பொடியா சின்ன பயந்த பொடியன் எண்டு நினைச்சியா? உது போல

எத்தனை மோகினிகளை அவன் சமாளித்திருக்கிறான். அந்த மோகினிகள் எல்லாம் அவன் வலையிலை விழுந்ததே தவிர அவன் விழுந்தது கிடையாது. என்ன பொடியா நான் சொல்வது சரிதானே?” என இரட்டைப்படக் கூறினான் பண்டா.

“ஆலமரமோ, புளியமரமோ, பூவரசமரமோ எந்த மரமும் எனக்குச் சரி. உண்டை சவாலை ஏற்று நான் வென்றால் என்ன சன்மானம்”? குனிந்த தலையுடன் விஸ்கியை கிளாசில் திரும்பவும் ஊற்றியபடி மஹந்தாவை பார்த்து பொடியா கேட்டான்.

“யோசிக்காதே. உனக்கு விருப்பமான விலை உயர்ந்த சிவாஸ் ரீகல் (Chivas Regal) வெளிநாட்டு விஸ்கி வைச்சிருக்கிறன் என்று அலுமாரிக்கு மேல் இருந்த விஸ்கி போத்தலை சுட்டிக்காட்டினான் மஹிந்தா.

போத்தலைத் திரும்பி பார்த்தபின், சற்று யோசித்துவிட்டு, “உன் சவாலை நான் ஏற்கிறேன்” என்று விஸ்கியை விழுங்கியபடி சொன்னான் பொடியா.

“அதோ இருக்கிறதே என் றலி சைக்கிள் அதை எடுத்துக்கொண்டு போ. டைனமோ வேலை செய்யவில்லை. வேண்டுமெண்டால் எண்டை டோர்ச் லைட்டை

கொண்டு போ.” என்றான் மஹிந்த.

“மழையும் காற்றுமாக இருக்குது. என்றை றெயின் கோட்டையும் போட்டுக்கொண்டு போ பொடியா” என்றான் பண்டா.

விஸ்கி வயிற்றுக்குள் வேலை செய்ய ஆரம்பித்தது பொடியாவுக்கு. பசி ஒரு பக்கம். காதர் நானாவின் கடையில ஸ்பெஷலாக தயாரித்த பிரியாணியும், கொத்து ரொட்டியும் வீசிய மணம் மறு பக்கம்.

“ நீங்கள் இரண்டு பேரும் நான் போய் வருமட்டும் போத்திலிலை இருக்கிற மிச்ச விஸ்கியையும் முடிச்சுப்பொட்டு சாப்பிடறதில்லை என்ன?” என்று கூறியபடி றெயின் கோட்டை மாட்டிக் கொண்டு டோர்ச்சுடன் சைக்கிளில் ஏறினான் பொடியா. சுவர்க் கடிகாரம் இரவு பதினொன்றே முக்காலைக் காட்டியது.

“பொடியா. நீ திரும்பி விழுதுகளுடன் வரும்மட்டும் விஸ்கி போத்தலோடையும் பிரியாணியோடையும், கொத்து ரொட்டியோடையும் நாங்கள் உனக்காக காத்திருப்போம்.” என்றான் பண்டா.

நண்பர்களுக்கு கைகாட்டிவிட்டு கொட்டும் மழையிலும் இடிமின்னலிலும் யுத்தத்துக்குப் போகும் வீரனைப்போல் வெளிக்கிட்டான் பொடியா. அவன் குடித்திருந்தும் நிதானம் தவறவில்லை. போக முன் “வீதிக்கு ஒன்று” என்று பண்டா கொடுத்த கிளாஸ் விஸ்கியை அப்படியே குடித்துவிட்டு பொடியா புறப்பட்டான்.

******

வெளியில் ஒரே கும்மிருட்டு. தவளைகளின் தாளவாத்தியக் கச்சேரியில் சில் வண்டு தொடர்ந்து மொர்ஸிங் வாசித்துக் கொண்டிருந்தது. அடிக்கடி தோன்றிய மின்னலும், இடியும் அவனுக்குத் துணையாக இருந்தன. விஸ்கியினால் சூடேறிய முகத்தில் மழைத்துளிகள் விழ அவனுக்கு இதமாயிருந்தது. மெனிககாவின் நினைவுதான் அவனுக்கு வந்தது. ஒரே ஒரு தடவைதான் அவளை வலுப்படுத்தி

அன்று ஒரு நாள் பெய்த மழையில் அவளிடம் உடலுறவு கொண்;டது இன்னும் பொடியாவின் நினைவைவிட்டுப் போகவில்லை. தான் உறவு வைத்த பெண்களை விட அவளிடம் இருந்த எதிர்ப்புத் தன்மை அவனை வெகுவாகக் கவர்ந்தது. ஆரம்பத்தில் முரண்டு பிடித்த அவள், விரைவில் பொடியாவின் கை வந்த கலைக்கு அடிமையானாள். அந்த உறவு நாளை அவனால் இன்றும் மறக்க முடியவில்லை. அவளுடன் அவன் உறவு கொண்டபோது அவள் வீட்டில் அப்போது ஒருவரும் இருக்கவில்லை.

“அவசரப்பட்டுவிட்டாள் மெனிக்கா. தனக்கு ஒரு காதலன் இருக்கிறான். தான் கெதியில் அவனை மணம் முடிக்கப் போகிறேன் என்று சொல்லியிருந்தால் அவளை நான் தொட்டிருக்க மாட்டேன். அதுக்காக போய் தற்கொலை செய்ய வேண்டுமா?”, யோசித்தவாரே காற்று வீசும் திசைக்கு எதிர் திசையில் சைக்கிளை மிதித்தான் பொடியா. ஏற்றத்தில் மிதிப்பது கடினமாக இருந்தது. யாரோ பின்னுக்கு இழுப்பது போன்ற ஒரு பிரமை. றெயின் கோர்ட்; பெல்டியின் ஒரு மூலை சைக்கிளின் பின் சக்கரத்தில் சிக்கிக்கொண்டது. ஆலமரத்துக்கு சைக்கிலில் போக வேறு பாதையில்லை என அவனுக்குத் தெரியும். ஐம்பது யாருக்கு சைக்கிலை தள்ளிக்கொண்டு போக வேண்டு;ம். அதுவும் ஒரு ஏற்றம். துணிந்து ஏற்றத்தில், கற்கள் நிரம்பிய பாதையில் மிதித்தான். ஆலமரத்தை நெருங்கியவுடன் ஊ ஊ என்ற சத்தத்துடன் ஒரு சுழிக்காற்று வீசியது. அதைத் தொடர்ந்து மின்னலும் இடியும். மின்னல் வெளிச்சத்தில் முழு ஆலமரமும் ஒரு பிசாசைப் போல் அவனுக்குத் தோற்றமளித்தது எங்கோ இல்லாத பயம் அவனுக்கு வந்தது. ஆனாலும் மனதைத் தைரியப் படுத்திக்கொண்டு தொங்கிக் கொண்டிருந்த ஒரு பெரிய ஆலம் விழுதை நெருங்கினான். திரும்பவும் ஒரு பளிச்சென்று கண்ணை குருடாக்கும் மின்னல். தொடர்ந்து பெரிய இடி முழக்கம்.. ஆலம் விழுதை பிடித்தபடி இருந்த அவன் கையில் மின்சாரம் பாய்வது போன்ற உணர்வு. “அணே! அம்மே!” என்று பொடியா சைக்கிளில் இருந்து கீழே சாய்ந்தான்.

ஆலமரம் மின்னல் தாக்கியதினால் தீ பற்றி எரியத்தொடங்கியது. பொடியா வந்த சைக்;கிளும் அதோடு எரியத் தொடங்கியது. மின்னிலின் தாக்கத்தினால் பொடியா உடம்பும் தீ பற்றிக் கொண்டது. அந்த இருளில் தீயில் வெந்து கொண்டிருந்தான் பொடியா. பெய்து கொண்டிருந்த மழை கூட அவனுக்கு உதவவில்லை. பொடியா கீழே விழுந்து உதவி கேட்டு சத்தம் போட்டு துடி துடித்தான். அந்த ஊழிக்காற்றின் சத்தத்தில் அவன் போட்ட ஓலம் கரைந்து விட்டது.

பேய் மழை தொடர்ந்து பெய்தது. சற்று நேரத்தில் அடையதளம் காணமுடியாதவாறு, பொடியாவின் கருகிய உடல் ஆலமரத்தின் கீழ் கிடந்தது. அந்த ஆல மரத்தின் கொப்பொன்று அவன்மேல் நெஞ்சாங் கட்டை போல் விழுந்து கிடந்தது. இயற்கை அன்னை அவனை பழிவாங்கிவிட்டாளா அல்லது ஆலமரத்து மெனிக்காவின் ஆவி அவனை வஞ்சம் தீர்த்து விட்டதா?. ஊர் சனங்களின் விளக்கத்தை இனி பொறுத்திருந்து கேட்போம். முன்புதான் “அரசன் அன்று கொல்லுவான் தெய்வம் நின்று கொல்லும் ” என்ற நம்பிக்கை. இன்று செய்த குற்றத்துக்கு தெய்வம் உடனே கொல்லும் போலும்..

******